1973 டிசம்பர் 3] *[பேரவைத் தலைவர்]*

1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவும் (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1973) 28—11—1973-ம் நாளன்று சட்ட மேலவையில் பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டன என்று சட்ட மேலவைத் தலைவரிடமிருந்து செய்திகள் வந்துள்ளது என்பதை இந்தப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

Town and Country Planning Bill, General Sales Tax Bill, Payment of Salaries Bill and the Hindu Religious and Charitable Endowments Bill are there and there is also the Private Schools Bill ஆகிய இந்த ஐந்து பில்கள் இருக்கின்றன. இன்றைக்கு எத்தனை பில்களை முடிக்கலாம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பேச விரும்புகின்றவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும், தாங்கள் எவ்வளவு பேர்களை அனுமதிக்கிறீர்கள் என்பதைப் பொருத்தும் நேரம் வரும். கல்வி மசோதாவைப் பொருத்த வரையில் நிரம்பப் பேர் பேச விரும்புவார்கள். இதை இன்றைக்கே எடுத்துக்கொண்டால்கூட நாளை வரையில் நீடிக்க வேண்டிவரும். அதற்கு முன்னால், இருக்கும் மசோதாக்களை விரைவில் முடித்து விட்டால் கல்வி மசோதாவை எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

(8) விளக்கம் கோரல்

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஒரு சட்ட முன்வடிவை முன்மொழிந்து, தமிழில் உரையாற்றாது, ஆங்கிலத்தில் உரையாற்றியது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் . தலைவரவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் சனிக்கிழமையன்று பேசும்பொழுது, மசோதாவை முன்மொழிந்து பேசும்பொழுது தமிழ் மொழியில் இன்னும் போதிய அளவிற்கு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : அதற்கு விளக்கம் தருவது அவசியம் என்று கருதுகிறேன். அப்படிச் செய்திகள் வருவதால், தமிழ்ப் பேராசிரியரோ இத்தகைய முறையிலே கருத்து தெரிவித்திருப்பதால், தமிழ் வளரவில்லை என்ற கருத்தில் செய்தி வந்திருக்கிறது.

சீக்கிரமாக எல்லா நடவடிக்கைகளையும் தமிழிலே மாற்ற வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் பேராசிரியர் வாயிலாக இத்தகைய கருத்து வருவதால் மாற்றுக் கருத்து ஏற்படக் கூடாது என்பதற்காக பேராசிரியர் அவர்கள் விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அன்றைய தினம் இதற்காக முன் விளக்க உரையைப் படிக்க நேரிட்ட பொழுது தமிழிலே உரையைத் தயாரித்துத் தந்திருந்தார்கள், ஆங்கிலத்திலே மூல உரை இருந்தது. தமிழிலே படிக்க நேரிட்டால் இடையிலே ஆங்கிலச் சொற்றொடர்களை விளக்கினால்தான், அடிக்கடி கேட்டுப் பழகாத அந்தத் தமிழ்ச் சொற்றொடர்கள், ஏற்கனவே வழக்கத்திற்கு வராத சொற்றொடர்களாக இருப்பதால் ஆங்கிலச் சொற்றொடர்களையும் இடையிலே படிப்பது தேவைப்பட்டது. இடையிடையே ஆங்கிலத்திலே படிப்பதைவிட, சட்டம் ஆங்கிலத்திலே கொண்டுவந்து நிறைவேற்றப்படுவதால் ஆங்கிலத்தில் படித்து விடுவதால் கேட்பவர்களுக்கு, அதிக அளவிற்கு உடனே புரிந்துகொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று எண்ணி ஆங்கிலத்தில் படித்து விடுகிறேன் என்றேன்.

ஏனென்றால் சில புதிய சொற்கள் தமிழில் வழக்குக்கு வர வேண்டியதை இன்றைக்கு ஆங்கிலத்திலுள்ளதால் புரிந்து கொள்ளுமாறு படிக்க வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்தேனே தவிர, தமிழில் முடியாது என்றோ, தமிழ் விளக்கம் தராது என்றோ தமிழால் அந்தக் கருத்துக்களைப் புரிய வைக்க முடியாது என்றோ பொருள் அல்ல. அங்கத்தினர்கள் சொல்லக்கூடிய கருத்துக்குத் துணையாக இருக்க எப்படி ஆங்கிலத்தில் இருக்கிறதோ அந்த வடிவத்தில் முன்னுரையைப் படிக்கிறேன் என்று படித்தேனே தவிர வேறல்ல. தமிழில் இன்னொரு பத்து நிமிடம் செலவிட்டு நல்ல முறையில் விளக்க முடியும். அங்கத்தினர்களுக்கு எப்போது தேவைப்பட்டாலும் அப்போது தமிழில் விளக்க பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.